தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-6-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆஸ்திரேலிய பிரதிநிதிகளின் வருகை**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆஸ்திரேலிய நாட்டு பிரதிநிதிகள் வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் ஆராய்ச்சி சம்மந்தமான உடன்பாடுகள் மற்றும் வாய்ப்புகள் பற்றி மாணவ மாணவியரிடம் உரையாடல் நடத்தினார்கள்.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் தனது வரவேற்புரையில் பலவிதமான கிரகங்கள், ராசிகள், நட்சித்தரங்கள் முதலிய வானசாஸ்திரங்கள் இந்தியாவில் பெருமைகொள்ளும் அளவிற்கு வளர்ந்துள்ளது என்றும் இந்திய சரித்திரத்தில் பலதரப்பட்ட ஆராய்ச்சிகள் வளர்ந்து விரிவடைந்துள்ளன என்றும் கூறினார்.

முனைவர். ச. மோகன், முதன்மையர், முதுநிலை அவர்கள் பல்வகையான ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் உடன்படிக்கைகள் பற்றிய விளக்கம் கூறினார்.

மேலும் முனைவர். டி. சுரேஷ்குமார் மற்றும் முனைவர் க.ம செல்லமுத்து ஆஸ்திரேலியாவில் ஆராய்ச்சி அனுபவங்களை மாணவர்களிடம் பகிர்ந்துகொண்டது மட்டுமல்லாமல் அந்நாட்டில் கல்வித் தரம், மாணவர்களுக்கான உதவிப்பணம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பற்றி அறிவுறைகள் வழங்கினார்கள்.

தென்னிந்தியாவில் ஆஸ்திரேலிய அரசாங்க பிரதிநிதிகளான திரு. ஸியான் கெல்லி மற்றும் திரு. மைக்கேல் கார்தர் அவர்கள் தங்களுடைய நாட்டின் கல்வி, வேலைவாய்ப்பு, உதவி பணம் பற்றிய அறிமுக உரையை மாணவர்களுக்கு தெரியப்படுத்தினார்கள்.

பல்கலைக்கழகத்தின் மாணவ மாணவியர் பிரதிநிதிகளுடன் கல்ந்துரையாடல் மூலம் பல சந்தேகங்களையும், கல்வி முறை வழிகாட்டுதல்கலையும் நன்கு அறிந்து கொண்டார்கள்.

இறுதியாக முனைவர். ம. மகேஸ்வரன், இயக்குநர், ஆராய்ச்சி அவர்கள் நன்றி உரையாற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்

# புகைப்படத் தொகுப்பு




Dr. K. Ramasamy, Vice-Chancellor, TNAU



Mr. Michael Carter, Australian Consul Commercial for South India




Dr. S. Mohan, Dean (SPGS), TNAU



Mr. Mr. Sean Kelly, Australian Consul General for South India





TNAU students and staffs